## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure**

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.149/2015** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.1.நாகராணி** |
| **Husband's Name** | : **பரமராஜ்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.06.2019**

மு.வி:

நான் எழுமலையில் வசித்து வருகிறேன். நான் காட்டு வேலைக்கு செல்கிறேன். 1வது எதிரி என் கணவரின் அண்ணன். 2வது எதிரி 1வது எதிரியன் மனைவி. சுமார் 4 1/2 வருடத்திற்கு முன்பு நானும் எனது மகனும் மாலை 5.30 மணிக்கு வீட்டிலிருந்து தோட்டத்திற்கு சென்றுகொண்டிருந்தோம். எதிரிகள் எங்கள் பின்னால் விசில் அடித்துக்கொண்டே வந்தார்கள். எங்களை அவ்வாறு விரட்டி வந்ததால் ஏன் பின்னால் வருகிறீர்கள் என கேட்டதற்கு 2வது எதிரி இந்த ரௌடியை குத்தவேண்டும் என என்னியை பார்த்து சொன்னார். 2 எதிரிகளும் கல்லால் என்னை எறிய வந்தார்கள். 1வது எதிரி இடுப்பில் வைத்திருந்த வெங்காயம் நறுக்கும் கத்தியை காண்பித்து உன்னை குத்தப்போறேன் என்று கூறினார். நான் எதுவும் பேசால் சென்றுவிட்டேன். நான் அங்கியிருந்து பயந்து சென்றுவிட்டேன். மீண்டும் 2வது எதிரி என்னை திட்டிக்கொண்டே வந்தார். நாங்கள் காவல் நிலையம் சென்று இது சம்மந்தமாக புகார் கொடுத்தோம். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனக்கு எழுதப்படிக்க தெரியாததால் கையெழுத்து சரியாக போடவராது. ஒரு போலீசார் நாங்கள் விபரம் சொல்ல அவர் எழுதினார். நான் கையெழுத்து போட்டேன். புகார் மனு **அ.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

சம்பவம் நடைபெற்ற சமயத்தில் அருகில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் அப்போது அங்கு யாருமில்லை. என்னோடு என் மகனும் வந்தார். சம்பவம் நடைபெற்ற அன்றே தினமே புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். புகார் கொடுக்க நான் மட்டும்

தான் காவல் நிலையம் சென்றேன். நான் புகார் கொடுத்து 10 நாட்கள் கழித்து தான் நான் போய் கேட்டேன். அதன்பிறகு நடவடிக்கை எடுப்பதாக போலீசார் கூறினார்கள். புகார் கொடுத்த பிறகு தான் என் கணவரிடம் கூறினேன். இந்த சம்பவம் நடைபெறுவதற்கு 4 மாதங்கள் முன்பு எதிரிகள் மீது ஒரு புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற சமயத்தில் எனது கணவர் கவுன்சிலராக இருந்தார் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் என் கணவரின் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுடன் வேறு நபர்கள் வந்தார்களா என்றால் இல்லை.

ம.வி:

இல்லை.

## DEPOSITION OF WITNESS

### (Chapter XXIII Code of Criminal Procedure

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.149/2015** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.2.பரமராஜ்** |
| **Father's Name** | : **ராமசாமி** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.06.2019**

மு.வி:

நான் எழுமலையில் வசித்து வருகிறேன். நான் வேளாண்மை தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி. 1வது எதிரி என் அண்ணன் மகன், 2வது எதிரி 1வது எதிரியின் மனைவி. எங்கள் வீட்டில் 1வது எதிரி மற்றும் அவரைச்சேர்ந்தவர்கள் முதல் நாள் தகராறு செய்தார்கள். அதற்கு மறுநாள் காலை 9 மணிக்கு என் மனைவி தோட்டத்திற்கு சென்றுகொண்டிருந்தார். அப்போது எதிரிகள் கல் மற்றும் கத்தியை வைத்து என் மனைவியை பார்த்து இவளை கொன்றால் தான் பிரச்சினை தீரும் என்று மிரட்டினார்கள். இது சம்மந்தமாக என் மனைவி என்னிடம் சொல்லி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

சம்பவ சமயத்தில் நான் கவுன்சிலராக இருந்தேன். புகார் கொடுக்கும்போது நான் உடன் சென்றேன். சம்பவத்தன்றே புகார் கொடுத்தேன். நான் முதல் விசாரணையில் கூறியதுபோல் தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது மேலும் மேலும் பொய் புகார்கள் கூறிவருகிறேன் என்றால் சரியல்ல. என் மனைவி சம்பவம் நடைபெற்று 10 நிமிடத்தில் என்னிடம் தகவல் சொன்னார்.

ம.வி:

இல்லை.